மட்டுமல்லாமல் சமூகம் மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் முதல் நாடாளுமன்றங்கள் போன்ற அரசியல் தளங்களிலும் பெண்களின் பங்கேற்பை அதிகரிக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கங்கள் பணிக்குழுவினுள் அடங்கும்.

கோட்டாறு மறைமாவட்ட அளவில் பெண்கள் பணிக்குழு செயல்பட்டு வந்தாலும் பெண்களின் விடுதலை என்பது சமயம் கடந்து சமூகம் சார்ந்த ஒன்றாகும். எனவே, குமரிமாவட்டத்தில் செயல்பட்டுவரும் ஒத்தச் சிந்தனையுடைய சுமார் எட்டு பெண்கள் அமைப்புக்களுடன் இணைந்து குமரிமாவட்டப் பெண்கள் கூட்டமைப்பு என்ற அமைப்பினை உருவாக்கி, வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் அவற்றுடன் இணைந்து நம் மறைமாவட்டப் பெண்கள் பணிக்குழுச் செயல்படுகிறது.

அரசியல் மாற்றம் காணச் செயல்படுவோம்

இவ்வாண்டு அகில உலகப் பெண்கள் நாளைக் கொண்டாடும் வேளையில் நமது நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வருகிறது என்பதை நினைவில் கொள்வோம். பசியில்லா நாடாகவும், சமத்துவ சமதர்ம சமுதாயமாகவும் மக்களுக்காக, அதிலும் குறிப்பாக ஏழை மக்களின் உயர்வை முன்னிறுத்துகின்ற நாடாகவும் நமது நாட்டை மாற்றிடும் சமயச் சார்பற்ற அரசை மத்தியில் உருவாக்கிட எல்லாரும் இணைந்து செயலாற்றிட வேண்டும். வாக்குக்கு விலை பேசாமல், நூறு விழுக்காடு வாக்காளர்களும் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்வதில் பெண்கள் முனைப்பாய்ச் செயல்பட வேண்டும். பெண்ணும் ஆணும் இணைந்து இவ்வுகில் சமத்துவப் பொதுமை உணர்வினை வளர்த்து புதிய உலகம் படைக்க உங்கள் எல்லாரையும் அன்புடன் அழைக்கிறேன்.

கிறிஸ்துவின் மனநிலையில்,

-sd-

ஆயர் நசரேன் சூசை

கோட்டாறு மறைமாவட்ட ஆயர்

---

குறிப்பு: 1. இச்சுற்றுமடல் நமது ஆலயங்களில் மார்ச் 3ஆம் நாள் ஞாயிறு திருப்பலியில் வாசிக்கப்பட வேண்டும்.

2. மார்ச் 8ஆம் நாளன்று பெண்கள் கூட்டமைப்பு சார்பில் மாலை 3.00 மணிக்கு வெட்டூர்ணிமடம் சந்திப்பிலிருந்து புறப்படும் பேரணியிலும், 4.00 மணியளவில் வடசேரி புதுத்தெருவில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் கலந்துகொள்ளப் பரிந்துரைக்கப்படுகிறது.